# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT
(MAGISTERIAL LEVEL), ALANDUR

| | | |
|---|---|---|
| Calendar | : | CC 188/2024 |
| Deposition of witness for | : | PW1 cross examination |
| Name | : | Radha Krishnan |
| Father's Name/Husband Name | : | Jambunathan |
| Religion | : | -- |
| Age | : | -- |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act X of 1969 of the day of 07.07.2025 ( Accused Present)

**குறுக்கு விசாரணை**

1. எதிரியை எனக்கு எவ்வளவு நாட்களாக எப்படி தெரியும் என்றால் எதிரி நான் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்த குடிநீர் கேன் கம்பெனியில் அவர் பணிபுரிந்ததன் மூலம் அவரை சுமார் 5 ஆண்டுகளாக தெரியும். தனிப்பட்ட முறையில் நான் வேறு எதாவது தொழில் செய்கிறேனா என்றால் தற்போது செய்யவில்லை. முன்னர் லாரிகளை கொண்டு போக்குவரத்து தொழில் செய்தேன். நான் தாக்கல் செய்துள்ள கடன் பத்திரத்தில் எதிரி என்ன காரணத்திற்காக கடன் பெற்றார் என்ற விவரம் இடம்பெறவில்லை என்றால் சரிதான். எதிரி யார் முன்னிலையில் கடன் பெற்றார் என்றால் அவரது மனைவியின் முன்னிலையில் பெற்றார். அவரது மகனின் படிப்பு செலவிற்காக பெற்றார். எதிரிக்கு வழங்கியதாக கூறும் கடன் தொகையை எந்த வழியில் வழங்கினேன் என்றால் ரொக்கமாக எனது வீட்டில் வைத்துள்ள தொகையை கொண்டு வழங்கினேன். இந்த விவரத்தை எனது புகாரில் தெரிவிக்கவில்லை

என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்தும் நபரா என்றால் இல்லை. இதற்கு முன்னர் நான் எதிரிக்கு பலமுறை கடன் வழங்கியுள்ளேன் என்றால் சரிதான். முன்னர் பெற்ற தொகையை எதிரி சரியாக செலுத்திவிட்டார் என்றால் சரிதான். அப்போது பாதுகாப்பிற்காக அவரிடமிருந்து வெற்று காசோலையை பெற்றேனா என்றால் இல்லை.

2. 20.02.2020 அன்று 3 சதவித வட்டிக்கு எதிரிக்கு ரூ.1.5 லட்சம் கடன் வழங்கினேன் என்றால் எனக்கு தேதி ஞாபகமில்லை. இதுவரை வட்டி எதுவும் விதிக்கவும் இல்லை. 05.12.2021 அன்று எதிரிக்கு ரூ.2 லட்சம் கடன் வழங்கினேன் என்றால் எனக்கு தேதி ஞாபகமில்லை. அதே போல் 07.08.2023 அன்று ரூ.1,48,500/- எதிரிக்கு கடனாக வழங்கினேன் என்றால் அதுவும் எனக்கு தேதி ஞாபகத்தில் இல்லை. எதிரியின் வீட்டிற்கு அடியாட்களோடு வட்டி வசூலிக்க நான் சென்றேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு நான் வட்டிக்கு ரூ.10 லட்சத்தை வழங்கவில்லை என்றால் சரியல்ல. நான் மேற்குறிப்பிட்டவாறு ரூ.1.5 லட்சம், ரூ.2 லட்சம் மற்றும் ரூ.1,48,500/- ஆகிய தொகைகளை மட்டுமே எதிரிக்கு கடனாக வழங்கினேன் என்றாலும், அதற்காக எதிரி வட்டி தொகை செலுத்தியுள்ளது அவரிடம் ஆதாரம் உள்ளது என்றாலும், அவ்வாறு கடன் வழங்கிய போது 3 காசோலைகளை பாதுகாப்பிற்காக எதிரியிடம் பெற்றேன் என்றாலும் அதில் ஒன்றை ரூ.10 லட்சத்திற்கு பூர்த்தி செய்து எதிரியிடமிருந்து பணம் பறிக்கும் நோக்கோடு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

3. எதிரியின் மகன் தனது படிப்பை முடித்துவிட்டார் என்றாலும், அவரின் படிப்பு விவரங்களை எதிரியால் தாக்கல் செய்ய முடியும்

என்றாலும், அவரின் மகனின் படிப்பு செலவிற்காக கடன் பெற்றார் என்று கூறுவது முற்றிலும் பொய் என்றாலும், சரியல்ல.

<u>**மறு விசாரணை இல்லை**</u>

Taken down by me in the open court and read over interpreted to the witness in the Language in which he/she understands in the presence of the accused or his pleader and admitted by him to be correct

Sd/E.Bhuvaneshwari
Judicial Magistrate
Fast Track Court,
Alandur.